வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria Money Transfer றியா பணப்பரிமாற்றம்
Western Union வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 27.03.2026 வெள்ளிக்கிழமை இதழ் : 80 பக்கங்கள் : 08

## ஐ.நா. வதிவிடப் பிரதிநிதியுடன் நேற்று தமிழ்த் தேசிய பேரவை முக்கிய பேச்சு!

### தமிழ் மக்களின் பிரச்னைகள் குறித்து எடுத்துரைப்பு



யாழ்ப்பாணம், மார்ச் 27

யாழ்ப்பாணம் வந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிடப் பிரதிநிதி மார்க் ஆன்ட்ரே பிரெஞ்ச் தமிழ்த் தேசியப் பேரவையினரை நேற்று யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இச்சந்திப்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் அதன் பொதுச்செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான செ.கஜேந்திரன், கொள்கை பரப்புச் செயலாளர் ந. காண்டீபன், தேசிய அமைப்பாளர் த. சுரேஸ் ஆகியோருடன் 07

# எந்தவொரு சூழ்நிலையிலும் இலங்கைக்கு உதவத் தயார்!

### ஜனாதிபதியிடம் ரஷ்ய அமைச்சர் உறுதி

கொழும்பு, மார்ச் 27


மத்திய கிழக்கில் நிலவும் போர்ச் சூழல் காரணமாக ஏற்படக்கூடிய எந்தவொரு சவாலையும் எதிர் கொள்ள இலங்கைக்கு ஆதரவளிக்க ரஷ்யா தயாராக இருப்பதாக ரஷ்ய வலுசக்தி பிரதி அமைச்சர் றோமன் மார்ஷவின் வலியுறுத்தினார்.

இலங்கைக்கு விஜயம் மேற் கொண்டுள்ள ரஷ்ய வலுசக்தி பிரதி அமைச்சர், நேற்று பிற்பகல் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவைச் சந்தித்த போதே இதனைத் தெரிவித்தார்.

தற்போது ஏற்பட்டுள்ள உலகளாவிய நெருக்கடிக்கு 07



## சிங்கள அரசுக்கு யார் தலைமை ஏற்றாலும் தமிழர்களுக்கு எதையும் தரத் தயாரில்லை!



### ஐ.நா. வதிவிட பிரதிநிதிக்கு ஜனநாயக தமிழ்த்தேசிய கூட்டமைப்பு விளக்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 27

சிங்கள பேரினவாத அரசின் அதிகாரத் தலைமையில் யார் ஆட்சிக்கு வந்தாலும், தமிழர்களுக்கு நீதியான தீர்வு எதை தயும் தருவதற்கு அவர்கள் தயாரில்லை என்று வடக்குக்கு விஜயம் செய்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிடப் பிரதிநிதி 07

## சுத்திகரிக்கப்பட்ட எரிபொருளை வழங்குவதற்கு ரஷ்யா இணக்கம்!

கொழும்பு, மார்ச் 27

இலங்கைக்குத் தேவையான சுத்திகரிக்கப்பட்ட எரி பொருளை வழங்குவதற்கு ரஷ்யா இணக்கம் தெரிவித்துள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் மயூர நெத்திகுமாரகே தெரிவித்துள்ளார்.

தற்போது இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ரஷ்ய எரிசக்தி பிரதி அமைச்சர் ரோமன் மார்ஷவின் தலைமையிலான தூதுக்குழுவினருடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போதே இந்தத் 07

## நடராஜா ரவிராஜ் கொலை வழக்கு; உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு இரத்து!

### வழக்கை மறுபரிசீலனை செய்ய மேல்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, மார்ச் 27

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜின் சர்ச்சைக்குரிய கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருந்த கடற்படை வீரர்கள் உள்ளிட்ட ஐந்து பிரதிவாதிகளை விடுவித்த கொழும்பு உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை இரத்து செய்த மேல்முறையீட்டு நீதி மன்றம், இவ் வழக்கை மறுபரிசீலனை செய்ய உத்தரவிட்டுள்ளது.

பிரதிவாதிகளை விடுவித்த கொழும்பு உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து சட்டமா அதிபர் தாக்கல் செய்த 07

## நாட்டின் ஏற்றுமதி வருமானம் உயர்வு

கொழும்பு, மார்ச் 27

இலங்கையின் ஏற்றுமதித் துறை 2026ஆம் ஆண்டின் தொடக்கத்தில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளதாக ஏற்றுமதி அபிவிருத்திச் சபை தெரிவித்துள்ளது.

2026 பெப்ரவரி மாதத்தில் 07

## ஈரானிய தூதுவரை சந்தித்தார் முன்னாள் ஜனாதிபதி மைத்திரி

கொழும்பு, மார்ச் 27

ஈரானிய தூதுவர் அலிரெசா டெல் கோஷை நேற்று முன்தினம் புதன் கிழமை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்தார். இந்த சந்திப்பு தொடர்பில் ஈரான். 07



## போதிய எரிபொருள் நாட்டுக்கு வந்துள்ளது

கொழும்பு, மார்ச் 27

இலங்கையின் எரிபொருள் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் மேலதிக எரிபொருள் கப்பல்கள் நாட்டை வந்தடைந்துள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

இது குறித்து பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் மயூர நெத்திகுமாரகே தெரிவிக்ககையில்-

35,500 மெற்றிக் தொன் டீசலை ஏற்றிய 07



யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் வீரர்களுடன் நேற்று பயிற்சியில் ஈடுபட்டார் ஐ.நா.வின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி மார்க் ஆன்ட்ரே பிரெஞ்ச். (அ)

## வட்டுக்கோட்டை வைத்தியசாலை குறித்து பல்வேறு தரப்பிடமிருந்தும் முறைப்பாடுகள்

### பவானந்தராஜா எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 27

வட்டுக்கோட்டை பிரதேச வைத்தியசாலை தொடர்பாக பல்வேறுபட்ட தரப்பினரும் பல தடவைகள் என்னிடம் முறைப்பாடு முன் வைத்தனர். இது தொடர்பாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரிடமும் நான் பல தடவை கூறியுள்ளேன் என யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிறீ பவானந்தராஜா தெரிவித்துள்ளார். 07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருந்துகள் விலை உயர்வு குறித்து அரசு இப்போது பரிசீலிக்கவில்லை

## சுகாதார பிரதி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 27

மருந்து உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருள்களின் விலை அதிகரித்துள்ளபோதிலும், மருந்துகளின் விலைகளை உயர்த்துவது குறித்து சுகாதார அமைச்சு தற்போது பரிசீலிக்கவில்லை என்று சுகாதார பிரதி அமைச்சர் கலாநிதி ஹன்சக விஜேமுனி தெரிவித்துள்ளார்.



சர்வதேச ரீதியில் எரிபொருள் விலை அதிகரிப்பு மற்றும் இறக்குமதி செலவுகள் உயர்ந்துள்ளபோதிலும், சுமார் 600 அத்தியாவசிய மருந்துகளுக்கு விதிக்கப்பட்டுள்ள அதிகபட்ச சில்லறை விலையில் எவ்வித மாற்றமும் செய்யப்படமாட்டாது என அவர் உறுதிப்படத் தெரிவித்தார்.

தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை அதிகார சபையினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள இந்த விலைக் கட்டுப்பாட்டை மீறுவோருக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

இதேவேளை, மூலப்பொருட்களின் விலை உயர்வு உள்ளூர் மருந்து உற்பத்தியாளர்களைப் பாதித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ள பிரதி அமைச்சர், பழைய கையிருப்புகள் தீரும் வரை தற்போதைய விலையிலேயே மருந்துகளை விநியோகிக்க உற்பத்தியாளர்கள் இணங்கியுள்ளதாகக் குறிப்பிட்டார். (அ)

# மக்களின் பிரச்னைகள், முறைப்பாடுகளை வட்ஸ்அப் மூலம் உடன் அனுப்பிவையுங்கள்!

## அமைச்சர் லால் காந்த கோரிக்கை



கொழும்பு, மார்ச் 27

விவசாயம், கால்நடை, காணி, நீர்ப்பாசனம் மற்றும் மகாவலி அபிவிருத்தி அமைச்சர் கே.டி. லால் காந்த, தமது அமைச்சுகளுடன் தொடர்புடைய பொது மக்களின் முறைப்பாடுகள் மற்றும் பிரச்னைகளை வாட்ஸ்அப் ஊடாக சமர்ப்பிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இதற்கென பிரத்யேகமாக ஒதுக்கப்பட்டுள்ள 071 2473104 என்ற இலக்கத்திற்கு குரல் பதிவுகளாக தகவல்களை அனுப்ப முடியும் என அமைச்சர் தனது உத்தியோகபூர்வ முகநூல் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

பொதுமக்களுக்கும் அமைச்சுக்கும் இடையிலான தொடர்புகளை இலகுபடுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக வழிகாட்டல்கள் மற்றும் உத்தியோகபூர்வ விசாரணைகளுக்காக அமைச்சரின் ஒருங்கிணைப்புச் செயலாளர் காமினி சேனாரத்னவை 071 8103579 என்ற இலக்கத்திலும், மக்கள் தொடர்பு அதிகாரி ரணில் விமலரத்னவை 075 8040110 என்ற இலக்கத்திலும் தொடர்புகொள்ள முடியும்.

# அத்தியாவசியப் பொருள்களின் விலை தன்னிச்சையாக உயர்வு!

கொழும்பு, மார்ச் 27

மத்திய கிழக்கு பிராந்திய மோதல்களைக் காரணம் காட்டி, அத்தியாவசியப் பொருள்களின் விலைகளை சில மொத்த வியாபாரிகள் தன்னிச்சையாக அதிகரித்துள்ளதாக வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு அத்தியாவசியப் பொருள்களின் விலைகளை அதிகரிக்கப் போவதில்லை என இறக்குமதியாளர்கள் இணக்கம் தெரிவித்துள்ளபோதிலும், சில விநியோகஸ்தர்கள் முறையற்ற வகையில் விலைகளை உயர்த்தியுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள பிரதி அமைச்சர் ஆர்.எம். ஜயவர்தன, போக்குவரத்துச் செலவுகளை விடவும் மிக அதிகமான இலாபத்தை வைத்துப் பொருள்கள் விற்கப்படுவதாகக் குறிப்பிட்டார்.

தற்போது நாட்டில் சுமார் மூன்று வாரங்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்கள் கையிருப்பில் உள்ளதாகவும், சீனிக்கான தட்டுப்பாடு ஏற்படாது எனவும் அமைச்சு உறுதியளித்துள்ளது. (அ)

# சுரேஷ் சாலே மீண்டும் சி.ஐ.டியிடம் ஒப்படைப்பு

கொழும்பு, மார்ச் 27

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் பணிப்பாளர், ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே, சிகிச்சையின் பின்னர் மீண்டும் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.


குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் காவலில் இருந்தபோது ஏற்பட்ட திடீர் உடல்நலக் குறைவு காரணமாக அவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வவுனியா செயலகத்தில் மாபெரும் தொழிற்சந்தை

வவுனியா, மார்ச் 27

திறன் மேம்பாட்டு அமைச்சு, மாவட்ட செயலகம், பிரதேச செயலகம் ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்த தொழிற் சந்தை நேற்று வவுனியா மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

குறித்த தொழிற் சந்தையில் கல்விசாரா தொழில் வழங்குநர், தனியார் தொழில் வழங்குநர் மற்றும் மனிதவள வேலைவாய்ப்பு திணைக்கள உத்தியோகத்தர்கள், தொழில் பெறுநர்கள் என பலரும் கலந்துகொண்டனர். (அ)



# நாட்டில் வெப்பச் சுட்டெண் தீவிர எச்சரிக்கை மட்டத்தில்!

கொழும்பு, மார்ச் 27

மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்கள் உட்பட பல பகுதிகளில் வெப்பச் சுட்டெண் “தீவிர எச்சரிக்கை” மட்டத்தில் நிலவும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

மேல், சபரகமுவ, தெற்கு மற்றும் வடமேல் மாகாணங்களுடன், அனுராதபுரம், மன்னார், வவுனியா மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களில் கடும் வெப்பம் நிலவக்கூடும் என்பதால், பொதுமக்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, நாட்டில் நிலவும் இந்த கடும் வெப்பமான காலநிலை காரணமாக பொது மக்களிடையே மனக்குழப்பம் அல்லது உளவியல் ரீதியான பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புள்ளதாக காலி கராப்பிட்டிய வைத்தியசாலையின் மனநல விசேட வைத்திய நிபுணர் ரூமி ரூபன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

எனவே, இந்த பாதிப்புகளிலிருந்து தவிர்ந்து கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சுகாதாரத் துறையினர் அறிவுறுத்தியுள்ளனர். (அ)

# அரசியல் பிரமுகர்களுக்கு வழங்கப்பட்டு மீளப்பெறப்பட்ட இல்லங்களில் 1/5 பங்கு மட்டுமே அரச நிறுவனங்களுக்கு!

கொழும்பு, மார்ச் 27

அரசியல் பிரமுகர்களுக்கு வழங்கப்பட்டிருந்த உத்தியோகபூர்வ இல்லங்களை மீண்டும் கையகப்படுத்தி, அவற்றை ஆக்கபூர்வமான பொருளாதாரத் தேவைகளுக்காகப் பயன்படுத்தும் அரசாங்கத்தின் கொள்கைத் திட்டத்தின் கீழ், இதுவரை மீளப்பெறப்பட்ட 52 இல்லங்களில் 10 மட்டுமே அரச நிறுவனங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதிகள், அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களுக்கு வழங்கப்பட்டிருந்த 53 இல்லங்களை மீளப்பெறுவதற்கு அடையாளம் காணப்பட்ட நிலையில், அவற்றில் 52 இல்லங்கள் தற்போது பொது நிர்வாக அமைச்சின் பொறுப்பில் உள்ளன.

ஒரு முன்னாள் ஜனாதிபதிக்கு ஒதுக்கப்பட்டிருந்த இல்லம் ஜனாதிபதி செயலகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள போதிலும், அது இன்னும் அமைச்சின் வசம் முறைப்படி வழங்கப்படவில்லை.

தற்போது மீளப் பெறப்பட்டுள்ள இல்லங்களில், நீதி அமைச்சுக்கு நான்கு இல்லங்களும், அரச புலனாய்வுச் சேவைக்கு இரண்டு இல்லங்களும் வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன், குற்றப்புலனாய்வுத் திணைக்களம், பொது - தனியார் கூட்டாண்மைப் பிரிவு, தேசிய பெண்கள் ஆணைக்குழு மற்றும் பொதுப் பாதுகாப்பு அமைச்சு ஆகியவற்றிற்கு தலா ஒரு இல்லம் வீதம் தற்காலிகமாகப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. (அ)

# மத்தளவில் விமானம் தரையிறங்க தடை; அமெரிக்கத் தூதரகம் பதிலளிக்க மறுப்பு

கொழும்பு, மார்ச் 27

மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தில் அமெரிக்க போர் விமானங்கள் தரையிறங்க அனுமதி மறுக்கப்பட்டதாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க பாராளுமன்றத்தில் வெளியிட்ட கருத்துக்கு, கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகம் நேரடிப் பதிலளிக்க மறுத்துள்ளது.

அமெரிக்கா மற்றும் இலங்கைக்கிடையே நீண்ட கால பாதுகாப்பு ஒத்துழைப்பு நிலவுவதாகத் தெரிவித்துள்ள தூதரகம், இராணுவ நகர்வுகள் குறித்த மேலதிக விபரங்களுக்கு வொஷிங்டனிலுள்ள பாதுகாப்புத் திணைக்களத்தைத் தொடர்புகொள்ளுமாறு குறிப்பிட்டுள்ளது.

இம் மாதம் 4 முதல் 8 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில், இரண்டு அமெரிக்க போர் விமானங்கள் மத்தல விமான நிலையத்தில் தரையிறங்க அனு[illegible]மதி கோரப்பட்டதாகவும், நாட்டின் நடுநிலைமையை பேணும் நோக்கில் அதற்கு அனுமதி மறுக்கப்பட்டதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார்.

இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் 2007 ஆம் ஆண்டு கையெழுத்திடப்பட்ட “அக்சா“ உடன்படிக்கை, கடந்த 2017 ஆம் ஆண்டில் மேலும் 10 ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டிருந்த நிலையில், இந்த விவகா[illegible]




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu 27.03.2026 வெள்ளிக்கிழமை
விசுவாவசு வருடம், பங்குனி 13

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## அரசியல் நம்பிக்கைகளில் எதற்காக இரட்டை நியாயம்?

இராணுவத்தைப் பயன்படுத்தி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எரிபொருளை விநியோகிப்பதற்கான ஏற்பாட்டை இலங்கை தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் நிராகரித்திருப்பதாக ஒரு செய்தி வெளியாகியிருக்கிறது.

அதற்கான காரணத்தைக் கூறியிருக்கும் அவர் உத்தேச ஏற்பாட்டுக்கு மாற்று யோசனைகளையும் முன்வைத்து பாராளுமன்ற செயலாளர் நாயகத்துக்கு சில தினங்களுக்கு முன்னர் கடிதம் ஒன்றை எழுதியிருக்கிறார். அந்த கடிதத்துக்கு செயலாளர் நாயகம் பதில் அனுப்பியதாக செய்தி வந்ததாக இல்லை.

ஆயிரக்கணக்கான தமிழர்கள் காணாமல் போனதற்கு பொறுப்பான அதே இராணுவ கட்டமைப்பிடம் இருந்து சேவைகளைப் பெற்றுக் கொள்ளப்போவதில்லை என்றும் அவ்வாறு பெற்றுக்கொள்வது தனது அரசியல் நம்பிக்கைகளுக்கும் தான் பிரதிநிதித்துவம் செய்யும் சமூகத்தும் துரோகமிழைப்பதாக அமையும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

"எரிபொருளைப் பெறுவதற்காக மாத்திரம் வன்னியில் ஒரு நகரத்தில் இருந்து இன்னொரு நகரத்துக்கு பயணம் செய்வது நடைமுறைச் சாத்தியமானதல்ல. வழமையான எரிபொருள் நிரப்பு நிலையங்களில் கியூ. ஆர். கோட் முறையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் எரிபொருளைப் பெறுவதற்கு ஏற்பாட்டைச் செய்யலாம் பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் மாவட்டங்களில் அவர்கள் எரிபொருளைப் பெறுவதற்கு வசதி செய்யலாம் இராணுவத்தை எந்த வகையிலும் ஈடுபடுத்தாமல் இலங்கைப் போக்குவரத்துச் சபை போன்ற அரச நிறுவனங்களின் ஊடாக எரிபொருளை விநியோகிக்கலாம்" என்று பாராளுமன்றச் செயலாளர் நாயகத்துக்கு எழுதிய கடிதத்தில் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எரிபொருளை விநியோகிப்பதற்கு இராணுவத்தை பயன்படுத்த இராணுவத்தை ஈடுபடுத்துவதற்கு பாராளுமன்ற நிருவாகம் தீர்மானித்ததற்கான காரணம் எதுவென்று தெரியவில்லை. அதேவேளை, எரிபொருளைப் பெறுவதற்கு மாத்திரம் ஒரு நகரத்தில் இருந்து இன்னொரு நகரத்துக்குப் பயணம் செய்வதில் உள்ள நடைமுறைப் பிரச்னையையும் விளங்கிக் கொள்ளக் கூடியதாக இருக்கிறது.

இராணுவத்தினரின் சேவை மூலம் எரிபொருளைப் பெற்று தனது அரசியல் நம்பிக்கைகளுக்கும் சமூகத்துக்கும் துரோகம் செய்ய விரும்பவில்லை என்ற நிலைப்பாட்டை எடுப்பதற்கு அவருக்கு இருக்கும் உரிமையை யாரும் கேள்விக்கு உட்படுத்தவும் முடியாது.

தமிழ் மக்களுக்கு அநியாயத்தையும் கொடுமைகளையும் செய்த காரணத்தினால் அரசின் ஒரு கட்டமைப்பின் சேவையை நிராகரிக்கும் அவரிடம் ஒரேயொரு கேள்வி.

அதாவது சுதந்திர இலங்கையின் பாராளுமன்றம் அதன் வரலாற்றில் சிறுபான்மைச் சமூகங்களுக்கு பாதகமாக அமைந்த - கொடூரமான எண்ணற்ற சட்டங்களை நிறைவேற்றியிருக்கிறது. இந்த பாராளுமன்ற அரசியலே தமிழ் மக்களின் இனறைய இடர்மிகு நிலைக்கு பிரதான காரணம்.

தமிழர்களுக்கு அநியாயம் செய்த இராணுவத்தின் சேவையை நிராகரிப்பது போன்று அவர்களின் பிரச்சினைகளுக்கு இன்றுவரை தீர்வு காண்பதற்கு உதவாத பாராளுமன்றத்தையும் பகிஷ்கரிக்க வேண்டியதுதானே. அநியாயங்களையும்கொடுமைகளையும் எதிர்ப்பதில் எதற்காக இரட்டை நியாயம்?

# ஹோர்முஸ் நீரிணையில் இனி கட்டணம் வசூலிக்க ஈரான் முடிவு

தெஹ்ரான், மார்ச். 27

ஹோர்முஸ் நீரிணை வழியாக பயணிக்கும் கப்பல்களிடம் கட்டணம் வசூலிப்பதற்கான சட்டங்களை இயற்ற ஈரான் பாராளுமன்றம் நடவடிக்கை எடுத்து வருகிறது என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஈரான் பாராளுமன்றத்தின் சிவில் விவகாரக் குழுவின் தலைவரை மேற்கோள் காட்டி வெளியாகியுள்ள செய்திகளின்படி, இதற்கான சட்டமூலம் ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளதுடன், விரைவில் சட்டத்துறையினால் அது இறுதி செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின்படி, ஹோர்முஸ் நீரிணை வழியாகச் செல்லும் கப்பல்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக ஈரான் கட்டணம் வசூலிக்க வேண்டும் என்று அந்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

இது ஒரு சாதாரண நடைமுறை என்றும் ஏனைய போக்குவரத்து வழிகளைப் போலவே, ஒரு நாட்டின் ஊடாகப் பொருட்களை கொண்டு செல்லும்போது வரி செலுத்தப்படுகிறது. ஹோர்முஸ் நீரிணையும் அத்தகைய ஒரு வழிப் பாதையே.

அதன் பாதுகாப்பை நாங்கள் உறுதிப்படுத்துவதால், கப்பல்களும் எண்ணெய் தாங்கிகளும் அதற்குக் கட்டணம் செலுத்துவது இயல்பானது என்றும் அவர் கூறியுள்ளார்.

போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக ஈரான் முன்வைத்துள்ள ஐந்து நிபந்தனைகளில் ஒன்று, ஹோர்முஸ் நீரிணை மீது தனது அதிகாரத்தைச் செலுத்துவதற்கான உரிமையை சர்வதேச சமூகம் அங்கீகரிக்க வேண்டும் என்பதாகும்.

(எ)

# ஹோர்முஸ் நீரிணையில் இந்தியா உள்ளிட்ட நட்பு நாடுகளின் கப்பல்களுக்கு அனுமதி

தெஹ்ரான், மார்ச். 27

சர்வதேச எரிசக்தி விநியோகத்தில் மிக முக்கிய பாதையாக கருதப்படும் ஹோர்முஸ் நீரிணை வழியாக பயணிக்கும் கப்பல்களுக்கான புதிய கட்டுப்பாடுகள் மற்றும் அனுமதிகள் குறித்து ஈரானிய வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்சி முக்கியமான அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளார்.

ஈரான் பாராளுமன்றம் ஹோர்முஸ் நீரிணையில் பயணக் கட்டணங்களை வசூலிப்பதற்கான சட்டமூலங்களைத் தயாரித்து வரும் பின்னணியில் அமைச்சரின் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

ஹோர்முஸ் நீரிணை வழியாகப் பயணிக்கும் போது இந்தியா, சீனா, ரஷ்யா, ஈராக் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் கப்பல்களுக்கு எந்தவிதத் தடையுமின்றி அனுமதி வழங்கப்படும் என்று அமைச்சர் அப்பாஸ் அராக்சி உறுதிப்படுத்தியுள்ளார்.

இந்த நாடுகளுடனான ஈரானின் நீண்டகால இராஜதந்திர மற்றும் வர்த்தக உறவுகளைக் கருத்தில்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக் காட்டினார்.

ஹோர்முஸ் நீரிணையின் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு முழுமையாக ஈரானின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது. எமது நட்பு நாடுகளின் வர்த்தக மற்றும் எண்ணெய் போக்குவரத்து கப்பல்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது எமது கடமையாகும் என அவர் தெரிவித்தார்.

இதேவேளை, பிராந்தியத்தில் பதற்றத்தை உருவாக்கும் ஏனைய நாடுகளின் கப்பல்கள் மற்றும் ஈரானுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடும் தரப்புகளின் நடமாட்டங்கள் குறித்து கடும் கண்காணிப்பு நிலவும் என்றும் அவர் எச்சரித்தார். (எ)

# யு.எஸ்.எஸ்.ஆபிரகாம் லிங்கன் கப்பலின் தாக்குதல் தொடரும்

வாஷிங்டன், மார்ச். 27


ஈரானின் இராணுவ இலக்குகள் மீதான தாக்குதல்களுக்காக, "யு.எஸ்.எஸ். ஆபிரகாம் லிங்கன்" விமானம் தாங்கி போர்க்கப்பல் பிராந்திய கடல் எல்லைகளிலிருந்து தனது வான்வழி நடவடிக்கைகளை தொடர்ச்சியாக முன்னெடுக்கும் என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

குறித்த போர்க்கப்பலை குறிவைத்து தாம் க்ரூஸ் ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தியதாகவும், இதன் காரணமாக கப்பலின் நிலையை மாற்ற வேண்டியிருந்தது என்றும் ஈரான் வெளியிட்ட அறிக்கையை தொடர்ந்து அமெரிக்கா இந்த விளக்கத்தை அளித்துள்ளது.

இருப்பினும், அமெரிக்க அதிகாரிகள் தமது நடவடிக்கைகளுக்கு எந்தவிதத் தடையுமில்லை என்றும், திட்டமிட்டபடி ஈரானிய இலக்குகள் மீது போர்க்கப்பலிலிருந்து தாக்குதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

(எ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மார்ச் - 27 வெள்ளிக்கிழமை
விசுவாவசு வருடம் - பங்குனி 13
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : தசமி

**மேடம்**
குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். மனதிற்கு இதமான செய்தி வரும். வியாபாரம் செழிக்கும். உத்தியோகத்தில் சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள்.

**இடபம்**
கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். புதுமுடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் புது தொடர்புகள் கிடைக்கும். உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். திருப்பங்கள் நிறைந்த நாள்.

**மிதுனம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் வேலைச்சுமையால் சோர்வாக காணப்படுவீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகளுடன் பனிப்போர் வந்து நீங்கும். திட்டமிட்டு செயல்பட வேண்டிய நாள்.

**கடகம்**
கணவன்-மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். வெளிவட்டாரத்தில் அலைச்சல் அதிகரிக்கும். மேலதிகாரியுடன் மோதல்கள் வந்து நீங்கும். விழிப்புணர்வு தேவைப்படும் நாள்.

**சிம்மம்**
குடும்பத்தில் உள்ளவர்களிடம் மனம் விட்டு பேசி மகிழ்வீர்கள். பழைய கடன் பிரச்சினை கட்டுப்பாட்டிற்குள் வரும். உத்தியோகத்தில் உயர் அதிகாரிகள் உங்கள் கோரிக்கையை ஏற்பார்கள்.

**கன்னி**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். உடன் பிறந்தவர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள். புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். புது வாய்ப்புகள் தேடி வரும். சாதிக்கும் நாள்.

**துலாம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தம் கையெழுத்தாகும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். புதிய மாற்றம் ஏற்படும் நாள்.

**விருட்சிகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் எந்த ஒரு காரியத்தையும் இரண்டு மூன்று முறை போராடி முடிக்க வேண்டி வரும். மறைமுக விமர்சனங்கள் வந்து போகும். முன்கோபத்தை தவிர்க்க வேண்டும்.

**தனுசு**
எதையும் தன்னம்பிக்கையுடன் செய்யத் தொடங்குவீர்கள். மனைவி வழி உறவினர்கள் பக்கபலமாக இருப்பார்கள். உத்தியோகத்தில் எல்லோரும் மதிப்பார்கள். நன்மை கிட்டும் நாள்.

**மகரம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். பயணங்களால் புது அனுபவம் உண்டாகும். வியாபாரத்தில் மாற்றம் செய்வீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். அமோகமான நாள்.

**கும்பம்**
புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டு. சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். புதுமை படைக்கும் நாள்.

**மீனம்**
கடந்த கால சுகமான அனுபவங்களை எல்லாம் மனதில் நிழலாடும். தாய்வழி உறவினர்களால் மனஸ்தாபம் வந்து நீங்கும். கலைப் பொருட்கள் வாங்குவீர்கள். அமைதி நிலவும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும்.

# 57 போதை மாத்திரைகளுடன் யாழில் 5 இளைஞர்கள் கைது!

யாழ்ப்பாணம், மார்ச். 27


கொழும்புத்துறை பகுதியில் வைத்து 57 போதை மாத்திரைகளுடன் ஐந்து இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், யாழ்ப்பாணம் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களிடம் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(எ-05)

## வவுனியாவில் பெருமளவு எரிபொருட்கள் பறிமுதல்



வவுனியா, மார்ச். 27


வவுனியா, தாண்டிக்குளத்தில் அமைந்துள்ள வாகன திருத்தும் நிலையத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் பெருமளவு எரிபொருட்களை விசேட அதிரடிப்படையினர் பறிமுதல் செய்தனர்.

நேற்று முன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

900 லீற்றர் சுப்பர் டீசல், 600 லீற்றர் டீசல் மற்றும் 400 லீற்றர் பெற்றோல் என்பன மீட்கப்பட்டன. இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவர் கைது செய்யப்பட்டார்.

(எ-10)

## அன்னை பூபதிக்கு அஞ்சலி



வவுனியா, மார்ச். 27

அன்னை பூபதியின் 38 ஆவது ஆண்டு நினைவுதினம் வவுனியாவில் உள்ள இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வடக்கு பிரதேச கிளை அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

வவுனியா வடக்கு பிரதேச சபை உறுப்பினர் த. தனுசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் ப. சத்தியலிங்கம், வவுனியா வடக்கு பிரதேச சபை உறுப்பினர்களான எஸ். சுசீலன், எஸ். சரோஜாதேவி மற்றும் கட்சியின் உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

(எ-10)

## "குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படும்"

யாழ்ப்பாணம், மார்ச். 27

யாழ்ப்பாணம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவன், பருத்தித்துறை கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்கத்துக்கு நேற்று முன்தினம் சென்றிருந்தார்.

இதன்போது, கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்கத்தில் காணப்படும் குறைபாடுகளை கேட்டறிந்ததுடன் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்கத்தில் காணப்படும் குறைபா டுகளை நிவர்த்தி செய்ய விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்தார்.

(எ-08)

## சிகிச்சை பலனின்றி குடும்பஸ்தர் மரணம்

யாழ்ப்பாணம், மார்ச். 27

யாழில் வீதியில் பயணித்த நபர் ஒருவர் மோட்டார் சைக்கிள் மோதியதில் உயிரிழந்தார். யாழ்ப்பாணம் - நாவலர் வீதியைச் சேர்ந்த கனகரத்தினம் கனகதாசன் (வயது- 62) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

இவர் கடந்த 18ஆம் திகதி கஸ்தூரியார் வீதியால் யாழ்ப்பாணம் நோக்கி பயணித்துக் கொண்டிருந்தார். அப்போது, வலதுபக்கம் திரும்புவதற்காக மத்திய கோட்டை நோக்கி சென்றவேளை பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் அவர் மீது மோதி விபத்து சம்பவித்தது.

குறித்த விபத்தில் படுகாயமடைந்த அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். இருப்பினும் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் அதிகாலை அவர் உயிரிழந்தார்.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

(எ-05)

## ஆதரித்து வாதிடும் பொறிமுறை வவுனியாவில் விசேட செயலமர்வு

வவுனியா, மார்ச். 27

ஆதரித்து வாதிடும் பொறிமுறை, யுக்திகள் மற்றும் முன்னெடுப்புகள் தொடர்பான இரண்டு நாட்கள் செயலமர்வு 24 - 25 ஆகிய திகதிகளில் வவுனியாவில் உள்ள தனியார் விடுதியில் நடைபெற்றது.

நலிவுற்ற சமூக அபிவிருத்திக்கான தன்னார்வ நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தச் செயலமர்வில் வளவாளராக சட்டத்தரணி முகமட் ஆசாத் பங்கேற்றார்.

இலங்கை அரசின் கிளீன் சிறீலங்கா திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கும் ஜனநாயக நடைமுறைகளை உரிமைகள், சட்டங்களை முறையாக நடைமுறைப்படுத்துவதன் மூலம் எவ்வாறு குடிமக்களின் சமூக இடைவெளிகளை பாதுகாப்பது எனும் தொனிப்பொருளில் இந்தப் பயிற்சி நடைபெற்றது.

குறித்த செயலமர்வில் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் எஸ். சுபாஷ், நலிவுற்ற சமூக அபிவிருத்திக்கான தன்னார்வ நிறுவனத்தின் பணிப்பாளர் த. கணேஷ், ஊடகவியலாளர்கள், சிவில் சமூக அமைப்பினர், மனித உரிமை செயல்பாட்டாளர்கள் கலந்து கொண்டனர்.

(எ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ரூ.10 கோடிக்கும் அதிக பெறுமதியான போதைப்பொருளுடன் இருவர் கைது!

கொழும்பு, மார்ச். 27
சட்டவிரோதமான முறையில் "குஷ்" ரக போதைப்பொருளை கடத்தி வந்த இருவர் நேற்று வியாழக்கிழமை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

இந்திய விமான சேவைக்கு சொந்தமான ஏ.ஐ.- 3203 என்ற விமானம் மூலம் நேற்று அதிகாலை 05. 20 மணியளவில் இவர்கள், புதுடில்லியிலிருந்து கட்டுநாயக்கவை வந்தடைந்தனர்.

விமான நிலையத்தின் வருகை முனையத்திலிருந்து வெளியேற முயன்ற போதே சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவினரால் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் பொகவந்தலாவை பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களில் ஒருவர் ஜன்னல் மற்றும் கதவு திரைச்சீலைகள் விற்பனை செய்யும் நிலையத்தில் பணியாற்றும் 25 வயது இளைஞன் எனவும், மற்றையவர் 26 வயது சாரதி எனவும் அடையாளம் காணப்பட்டனர்.

சந்தேகநபர்கள் கொண்டு வந்த 04 பயணப் பொதிகளை சோதனையிட்ட போது, அவற்றின் அடிப்பகுதியில் சூட்சுமமான முறையில் 12 பொதிகளாக மறைத்து வைக்கப்பட்டிருந்த 10 கிலோ 476 கிராம் "குஷ்" போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது.

இந்த போதைப்பொருட்கள் சுமார் 10 கோடியே 47 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் பெறுமதியுடையவை என்று சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவினர் தெரிவித்தனர்.

இந்த போதைப்பொருள் தொகுதி தாய்லாந்தின் பாங்கொக் நகரில் கொள்வனவு செய்யப்பட்டமை என்று ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. (எ)

உலக சந்தையில்

# மசகு எண்ணெய் விலை மீண்டும் அதிகரித்தது!

கொழும்பு, மார்ச். 27
உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை நேற்று மீண்டும் அதிகரித்துள்ளது.

ஒரு பீப்பாய் மசகு எண்ணெய் விலை 91. 39 அமெரிக்க டொலர்கள் வரை அதிகரித்துள்ளது. இது ஒரு சதவீத உயர்வாகும்.

ஒரு பீப்பாய் பிரெண்ட் வகை எண்ணெய் விலை 103. 3 அமெரிக்க டொலர்கள் வரை அதிகரித்ததுடன், இது 1.10 சதவீத உயர்வாகும்.

மர்பன் ரக மசகு எண்ணெய் ஒரு பீப்பாயின் விலை 105.4 அமெரிக்க டொலர்களாக பதிவாகியுள்ளது. இது முன்னைய விலையுடன் ஒப்பிடுகையில் 14.52 சதவீத வீழ்ச்சியாக கருதப்படுகிறது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், ஈரான் மீதான தாக்குதல்களை 5 நாட்களுக்கு தற்காலிகமாக நிறுத்துவதற்கு எடுத்த தீர்மானத்தையடுத்து மசகு எண்ணெய் விலை குறைந்திருந்தது.

இருப்பினும், தற்போது மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவும் போர்ச் சூழல் மற்றும் அரசியல் நிச்சயமற்ற தன்மைகள் காரணமாக எண்ணெய் விலைகள் மீண்டும் அதிகரிக்க தொடங்கியுள்ளதாக பொருளாதார ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டினர். (எ)

# எரிபொருள் விநியோக கட்டணத்தை 25 சதவீதம் அதிகரிக்க கோரிக்கை

கொழும்பு, மார்ச். 27
எரிபொருள் விநியோக கட்டணங்கள் சுமார் 25 சதவீதத்தால் அதிகரிக்கப்பட வேண்டும் என்று இலங்கை பெற்றோலிய தனியார் தாங்கிகள் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அரசாங்கத்துக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது என்று அதன் தலைவர் எச். அதிகாரி குறிப்பிட்டார்.

"விநியோக நடவடிக்கைகளில் சிரமங்கள் இருந்தபோதிலும், கடந்த நாட்களில் எந்தவொரு தடையுமின்றி விநியோகப் பணிகளை முன்னெடுத்தோம். இவ்வாறான நிலையில்தான் அண்மையில் எரிபொருள் விலை பெருமளவில் அதிகரிக்கப்பட்டது. இந்த மாதத்தில் மட்டும் எரிபொருள் விலை 101 ரூபாயால் அதிகரித்துள்ளது. இதனால், எமது விநியோக நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் உரிமையாளர்கள் பெரும் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

எரிபொருள் விலை அதிகரிப்புக்கு ஏற்ப விலைச் சீராக்கல் தற்போது இடம்பெற்றுள்ளது. இருப்பினும், நகரங்களுக்கு இடையிலான விநியோக நடவடிக்கைகளே எமக்கு பெரும் பிரச்னையாக உள்ளது. எனவே, நகரங்களுக்கு இடையிலான விநியோக கட்டணத்தை 21ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் 25 சதவீதத்தால் அதிகரிக்குமாறு கோரிக்கை விடுக்க செயல்குழு ஏகமனதாக தீர்மானித்துள்ளது. தற்போதைய அரசாங்கம் எங்களை இக்கட்டான நிலைக்குத் தள்ளாது என்ற நம்பிக்கையில் நாங்கள் இருக்கிறோம்"- என்றார். (எ)

# எரிபொருள் விலை தாக்கம்: ரயில் பயணிகள் அதிகரிப்பு

கொழும்பு, மார்ச். 27
எரிபொருள் விலை உயர்வு மற்றும் பஸ் கட்டண அதிகரிப்பு பின்னணியில், பொது மக்கள் அதிகளவில் ரயில்களை நாடத் தொடங்கியுள்ளனர் என்று ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பயணிகள் அதிகரிப்பால் ரயில்வே திணைக்களம் அண்மைக் காலமாக இலாபம் ஈட்டி வருவதாக குறித்த சங்கத்தின் பொதுச் செயலாளர் சுசன் சாமர ஜயசேகர தெரிவித்தார்.

பயணிகள் தேவை அதிகரித்துள்ள நிலையில் ரயில் சேவைகளை அதிகரிக்குமாறும், பொருளாதார சுமையை கருத்தில் கொண்டு கட்டணங்களை உயர்த்த வேண்டாமெனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (எ)

பொருட்களின் விலை அதிகரிப்பு

# மோசடிகளைத் தடுக்க சுற்றிவளைப்பு ஆரம்பம்

கொழும்பு, மார்ச். 27
எரிபொருள் விலை அதிகரிப்பை தொடர்ந்து, சந்தையில் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன.

இதன்படி பருப்பு, நெத்தலி மற்றும் தேங்காய் எண்ணெய் உள்ளிட்ட அனைத்து அத்தியாவசியப் பொருட்களின் விலைகளும் அதிகரித்துள்ளன என்று கொழும்பு- புறக்கோட்டை மொத்த வியாபாரிகள் தெரிவித்தனர்.

எனவே, சந்தையில் நுகர்வோர் அசௌகரியங்களுக்கு உள்ளாவதைத் தடுக்கும் வகையில், நாடளாவிய ரீதியில் விசேட சுற்றிவளைப்புகளையும் விசாரணைகளையும் ஆரம்பித்துள்ளதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை அறிவித்துள்ளது. (எ)

# ஆசிரியர்களிடம் விளக்கம் கோரல் ஆசிரியர் சங்கம் கடும் கண்டனம்

கொழும்பு, மார்ச். 27
தங்காலையில் பிரதமர் ஹரிணி தலைமையில் நடைபெற்ற ஆசிரியர் சந்திப்பொன்றில் கலந்துகொள்ளாமை தொடர்பில் விளக்கம் கோரி தங்காலை வலயக் கல்வி அலுவலகம் விடுத்த அறிக்கையை வன்மையாக கண்டிப்பதாக இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அவ்வாறு செயல்படுவதற்கு எந்த அதிகாரமும் இல்லை என்று அந்தச் சங்கத்தின் அம்பாந்தோட்டை மாவட்ட செயலாளர் சுரங்க சிந்தக தெரிவித்தார்.

"ஞாயிற்றுக்கிழமைகளில் ஆசிரியர்களை அழைப்பது என்பது எவ்வகையிலும் செய்ய முடியாத ஒரு காரியம். எனவே, இந்தச் செயலை நாங்கள் வன்மையாக கண்டிக்கிறோம். இது குறித்து ஆசிரியர்களுக்கு தெளிவுபடுத்தும் பணிகளில் நாங்கள் மேலும் ஈடுபட்டு வருகிறோம்" - என்றார். (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் 5,000 பேர் சிறுநீரக நோயின் இறுதிக்கட்டத்தில்

## விழிப்புணர்வுடன் இருக்குமாறு எச்சரிக்கை

கொழும்பு, மார்ச். 27

நாட்டில் தற்போது 5,000 பேர் சிறுநீரக நோயின் இறுதிக் கட்டத்தில் உள்ளனர் என்று சுகாதார மேம்பாட்டு பணியகம் தெரிவித்துள்ளது. அத்துடன், ஆண்டொன்றுக்கு சுமார் 300 சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைகள் மாத்திரமே மேற்கொள்ளப்படுவதாகவும் அந்தப் பணியகம் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பில், சிறுநீரக நோய் விசேட மருத்துவ நிபுணர் நாலக ஹேரத் கருத்து தெரிவிக்கையில்,

"நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்தம் உள்ளவர்கள், வருடத்துக்கு ஒரு முறையாவது தங்களது சிறுநீரகங்களை பரிசோதனை செய்து கொள்வது அவசியமாகும்.

சிறுநீரக நோய்க்கான பிரதான காரணங்களாக நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்தமே காணப்படுகிறது.

ஆரம்ப கட்டப் பரிசோதனைகள் இன்மையால், பல நோயாளர்கள் இந்நோயின் இறுதிக்கட்டத்தை எட்டிய பின்னரே தமக்கு நோய் இருப்பதை கண்டறிகின்றனர்.

சிறுநீரக நோயை ஆரம்பத்திலேயே கண்டறிந்து, முறையான மருத்துவ ஆலோசனைகளைப் பின்பற்றுவதன் மூலம், சிறுநீரக செயலிழப்பு அபாயத்தை குறைத்து நோயாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த முடியும்."- என்றார். (எ)

# இனி நினைத்தவுடன் கைது செய்ய முடியாது!

## பொலிஸாருக்கு புதிய உத்தரவு



கொழும்பு, மார்ச். 27

சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச உடன்படிக்கை சட் டத்தின் 3ஆவது பிரிவின் கீழ் சந்தேக நபர்களை கைது செய்யும் போது பின்பற்ற வேண் டிய புதிய வழிகாட்டுதல் களை பொலிஸ் மா அதிபர் வெளி யிட்டுள்ளார்.

அனைத்து சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் உள்ளிட்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு இது தொடர்பான எழுத்துமூர்வ அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது.

குறித்த சட்டப்பிரிவுகளின் படி, ஒருவரது பேச்சு அல்லது அறிக்கை மூலம் போரைத் தூண்டுதல், அல்லது பாகுபாடு, பகைமை அல்லது வன்முறைக்கு வழிவகுக்கும் தேசிய, இன அல்லது மத வெறுப்பைத் தூண்டுதல் போன்ற காரணிகள் உள்ளனவா? என்பதை ஆராய்ந்த பின்னரே ஒருவரைக் கைது செய்ய முடியும்.

அவ்வாறு ஒரு வரைக் கைது செய்வதாக இருந் தால், அதற்கு முன் னதாக சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரி, சட்டப் பிரிவின் பணிப்பா ளருக்கு தெரியப்படுத்தி, முன்முயற் சியாக எழுத்துமூர்வ அனுமதியை பெற வேண்டும்.

குறிப்பாக, தனிநபர்களுக்கோ அல்லது குழுக்களுக்கோ பொதுச் சமூகத்தில் மனவருத்தம் அல்லது அவமதிப்பு ஏற்பட்டாலோ, அல்லது தெய்வ நிந்தனை இடம்பெற்றாலோ, அதனை மாத்திரம் ஐ.சி.சி.பி.ஆர். சட்டத்தின் 3ஆவது பிரிவின் கீழ் கைது செய்வதற்கான காரணமாக கருதக்கூடாது.

இந்த விதிமுறைகளை மீறிச் செயல்படுவது அல்லது அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துவது கண்டறியப்பட்டால், சம்பந்தப்பட்ட விசாரணை அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலிஸ் மா அதிபர் எச்சரித்துள்ளார். (எ)

# இம்முறை 16,775 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை

சம்மாந்துறை, மார்ச். 27

சம்மாந்துறையில் இம்முறை 16, 775 ஏக்கர் காணிகள் சிறுபோக நெற் செய்கைக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

கல்லோயா ஆற்றுப் பிரிவின் கீழ் சிறுபோக நெற் செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கான ஆரம்ப குழுக் கூட்டம் அம்பாறை - சம்மாந்துறை தாறுஸ்ஸலாம் வித்தியாலய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன்போது, சிறுபோகத்துக்கான விதைப்புகாலம், நிர் விநியோகம், பயிர் காப்புறுதி, விதைக்கும் நெல்லினம், மாடுகளை அப்புறப்படுத்தல், கிளை வாய்க்கால் துப்புரவு போன்ற விடயங்களுக்கான கால அட்டவணையும் தீர்மானிக்கப்பட்டது.

அத்தோடு, கல்முனை நீர்ப்பாசன திணைக்கள பிரிவில் 11, 451 ஏக்கர் காணிகளும் அக்க ரைப்பற்று நீர்ப்பாசன காரியாலயத்தில் வீரயடி பிரிவில் 3,900 ஏக்கர் காணிகளும், சம்மாந்துறை நீர்ப்பாசன திணைக்கள பிரிவில் 16,775 ஏக்கர் காணிகளும் இம் முறை சிறுபோக விவசாய செய்கைக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. (எ-06)

# அம்பாறை மாவட்டத்தின் ஒருங்கிணைப்பு கூட்டம்

கல்முனை, மார்ச். 27

அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் நேற்று மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூட மண்டபத்தில் நடைபெற்றது.

அரசாங்க அதிபர் அனுபம மங்கள விக்கிரமராச்சி ஏற்பாட்டில் கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸ மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரத்னசேகர ஆகியோரின் தலைமையில் குறித்த கூட்டம் நடைபெற்றது.

அம்பாறை மாவட்டத்தின் அபிவிருத்தி திட்டங்கள், சமூக நல நடவடிக்கைகள், மற்றும் பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் குறித்து இந்தக் கூட்டத்தில் விரிவாக ஆலோசிக்கப்பட்டது. (எ-06)

# போதைப்பொருட்களுடன் ஒரே நாளில் 931 பேர் கைது

கொழும்பு, மார்ச். 27

ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய, நாட்டில் போதைப் பொருளை தடுக்கும் நோக்கிலான "முழு நாடுமே ஒன்றாக" எனும் தேசிய திட்டத்தின் கீழ், புதன்கிழமை முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் 931 பேர் போதைப்பொருட்களுடன் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு நேற்று தெரிவித்துள்ளது.

அத்துடன், தடுப்புக்காவல் உத்தரவு பெற்ற 08 பேர் கைது செய்யப்பட்டனர். இதேவேளை, 931 சோதனைகள் நடத்தப்பட்டதுடன், இருவர் புனர்வாழ்வு நிலையத்துக்கு அனுப்பிவைக்க பரிந்துரைக்கப்பட்டனர்.

குறித்த போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளின் போது சிக்கிய சந்தேக நபர்கள் வைத்திருந்த போதைப்பொருட்களையும் இதன்போது பொலிஸார் கைப்பற்றினர்.

இதற்கமைய, சந்தேக நபர்களிடமிருந்து ஒரு கிலோ 415 கிராம் ஹெரோயின், ஒரு கிலோ 806 கிராம் ஐஸ், 10 கிராம் 220 மில்லி கிராம் கொக்கெய்ன், 07 கிலோ 147 கிராம் கஞ்சா, 11,985 கஞ்சா செடிகள், 467 கிராம் குஷ் ரக போதைப்பொருள், 211 கிராம் ஹஷீஷ் ரக போதைப்பொருள், 1,473 போதை மாத்திரைகள், 09 கிலோ 916 கிராம் மதனமோதகம் மற்றும் 720 கிராம் மாவா போதைப் பொருள் என்பன கைப்பற்றப்பட்டன.

# பொத்துவில் கனகர் மீள்குடியேற்ற கிராமத்தில் புதிய வீடுகள் திறப்பு

பொத்துவில், மார்ச். 27

அம்பாறை- பொத்துவில் 60ஆம் கட்டை கனகர் மீள்குடியேற்ற கிராமத்தில் அமரர் கலாநிதி சதாசிவம் மகேஸ்வரன் நம்பிக்கை நிதியத்தின் நிதிப்பங்களிப்புடன் நிர்மாணிக்கப்பட்ட குடியிருப்பு வீடுகளை திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. (எ)



# 120,200 சிகரெட்கள் கைப்பற்றல்: சீனப் பிரஜைகள் மூவர் கைது

கொழும்பு, மார்ச். 27

சீனத் தயாரிப்பு சிகரெட்களை சட்டவிரோதமான முறையில் நாட்டுக்கு கொண்டு வந்த சீனப் பிரஜைகள் மூவர் நேற்று வியாழக்கிழமை அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

இவர்கள், தாய்லாந்தின் பாங்கொக் நகரில் இருந்து எயார் ஏசியா விமான சேவைக்கு சொந்தமான விமானம் மூலம் நேற்று அதிகாலை 01. 40 மணியளவில் கட்டுநாயக்கவை வந்தடைந்தனர்.

சந்தேகநபர்கள் கொண்டு வந்த 09 பயணப் பொதிகளைச் சோதனையிட்ட போது, அவற்றுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 601 கார்ட்டூன்களில் அடைக்கப்பட்டிருந்த 120,200 சீனத் தயாரிப்பு சிகரெட்கள் சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டன.

இந்த சிகரெட்கள் சுமார் ஒரு கோடியே 80 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் பெறுமதியுடையவை என்று சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர். (எ)

# வளர்ப்பு நாய் கொண்டு வந்த பந்து வெடித்து சிறுவன் காயம்

கம்பஹா, மார்ச். 27

பல்லேவெல - பந்துராகொட பகுதியில் நாய் கொண்டு வந்த பந்து போன்ற பொருள் வெடித்ததில் 10 வயது சிறுவன் ஒருவர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சிறுவன் வீட்டில் இருந்த போது, அவர்களது வளர்ப்பு நாய், பந்து போன்ற பொருளொன்றை கவ்விக்கொண்டு வீட்டுக்குள் வந்துள்ளது.

அதனை சிறுவன் நாயிடமிருந்து எடுத்துக்கொண்டு விளையாட தொடங்கியுள்ளார்.

அவர் விளையாடிக்கொண்டிருந்தபோது, எதிர்பாராத விதமாக அந்தப் பொருள் வெடித்துள்ளது.

இந்த வெடிப்பில் காயமடைந்த சிறுவன் உடனடியாக சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எ)

# மேல், சப்ரகமுவ மாகாணங்களில் இடியுடன் கூடிய மழைக்கு வாய்ப்பு

கொழும்பு, மார்ச். 27

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் பிற்பகல் 02.00 மணிக்கு பின்னர் ஒரு சில இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

நாட்டின் ஏனைய பகுதிகளில் பிரதானமாக வறட்சியான வானிலை நிலவும்.

மத்திய, சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் அதிகாலை வேளையில் பனிமூட்டமான நிலை காணப்படும்.

இடியுடன் கூடிய மழையின் போது ஏற்படக்கூடிய தற்காலிக பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு குறித்த திணைக்களம் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ.நா. வதிவிட...

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசனும் கலந்துகொண்டிருந்தார்.

இச்சந்திப்பின்போது மத்திய கிழக்குப் போர் காரணமாக இலங்கையில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள், அவற்றால் ஏற்கனவே போரால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு தமிழ் மக்களும், டித்வா புயலாலும் தற்போது தேயிலை ஏற்றுமதியில் ஏற்பட்டுள்ள பின்னடைவு காரணமாகவும் மலையக மக்களும் மேலதிகமாக எதிர்கொள்ளும் சவால்கள் போன்றவற்றுடன், தேசிய மக்கள் சக்தியால் முன்னெடுக்கப்பட்டுள்ள பிரஜாசக்தி முறைமையால் ஜனநாயக முறையில் தெரிவுசெய்யப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள், அரச திணைக்களங்களால் தொடரும் காணி அபகரிப்புகள், மகாவலி அதிகார சபையால் மேற்கொள்ளப்படும் நில அபகரிப்பு, தையிட்டி விகாரை விவகாரம், மற்றும் பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் புதிய சட்டம், ஒற்றையாட்சி அரசியல் அமைப்பைத் தமிழ் மக்கள் நிராகரிப்பதற்கான காரணங்கள் உட்படப் பல்வேறு விடயங்கள் பற்றி விரிவாக உரையாடப்பட்டதாகத் தமிழ்த் தேசியப் பேரவையினர் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது

இதற்கு முன்னதாக, கடந்த வருடம் மே மாதத்தில் ஐ.நா வதிவிடப் பிரதிநிதி மார்க் ஆன்ட்ரே பிரெஞ்சேயை அவரது கொழும்பு அலுவலகத்தில் தமிழ்த் தேசியப் பேரவையினர் சந்தித்து உரையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## எந்தவொரு சூழ்நிலையிலும்...

மத்தியில் இலங்கை எதிர்கொள்ள வேண்டியுள்ள சவால்கள் குறித்து ரஷ்யாவுக்கு புரிதல் இருப்பதாக இங்கு குறிப்பிட்ட ரஷ்ய வலுசக்தி பிரதி அமைச்சர், வலுசக்தி துறையில் மட்டுமன்றி தொழில்நுட்பம், இயந்திர உபகரணங்கள் போன்ற எவ்வகையிலான ஒத்துழைப்பையும் இலங்கைக்கு வழங்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும், இலங்கையில் தமக்கு அளிக்கப்பட்ட அன்பான வரவேற்புக்கு தனது நன்றியைத் தெரிவித்த பிரதி அமைச்சர், இலங்கைக்கும் ரஷ்யாவிற்கும் இடையிலான நீண்டகால உறவுகள் இந்த விஜயத்தின் மூலம் மேலும் உறுதிப்படுத்தப்படும் என நம்பிக்கை வெளியிட்டார்.

இலங்கை மற்றும் ரஷ்யாவுக்கு இடையில் நிலவும் நீண்ட கால நட்புறவை இங்கு நினைவு கூர்ந்த ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, கடந்த காலங்களில் சோவியத் ரஷ்யா இலங்கைக்கு வழங்கிய தொழில்நுட்ப மற்றும் கைத்தொழில் உதவிகள் அக்காலப்பகுதியில் இலங்கையின் பொருளாதார, சமூக வளர்ச்சிக்கு பெரும் பக்கபலமாக அமைந்திருந்ததாகக் குறிப்பிட்டார்.

அண்மைக் காலத்திலும்கூட, இலங்கைக்கு அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருகை தரும் நாடுகளில் ரஷ்யா முன்னிலையில் இருப்பதைச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, பெருமளவிலான இலங்கை மாணவர்களுக்கு கல்வி வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்து வழங்கும் ஒத்துழைப்பையும், இரு நாடுகளுக்கும் இடையிலான சமூக கலாசார உறவுகளையும், சர்வதேச விவகாரங்களில் இலங்கைக்கு ரஷ்யா வழங்கி வரும் ஆதரவையும் நன்றியுடன் நினைவு கூர்ந்தார்.

பிரதி அமைச்சரின் இந்த விஜயம், இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் மேம்படுத்துவதற்கு காரணமாக அமையும் என ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க மேலும் நம்பிக்கை தெரிவித்தார்.

தொழில் அமைச்சரும் நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சருமான கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ, வலுசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரோஷன் கமகே ஆகியோர் இலங்கை அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி இந்நிகழ்வில் கலந்துகொண்டதுடன், இலங்கைக்கான ரஷ்ய தூதுவர் லெவன் எஸ். தகர்ஜான், ரஷ்ய வலுசக்தி அமைச்சின் சர்வதேச ஒத்துழைப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் விளாடிமிர் கஷோவ், பெற்றோலியம் சார்ந்த சேவை வர்த்தக திட்ட அபிவிருத்தித் திணைக்களத்தின் பிரதித் தலைவர் சேர்ஜே றொடின் உள்ளிட்ட ரஷ்ய தூதுக்குழுவினர் இதில் கலந்து கொண்டனர். (அ)

## சுத்திகரிக்கப்பட்ட...

தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

இலங்கையின் தற்போதைய எரிபொருள் தேவையை கருத்திற்கொண்டு, தட்டுப்பாடின்றி சுத்திகரிக்கப்பட்ட பெற்றோல் மற்றும் டீசல் ஆகியவற்றை வழங்குவதற்கு ரஷ்ய பிரதி அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

இடைத்தரகர்கள் இன்றி அரச மட்டத்திலான நேரடி உடன்படிக்கைகளின் ஊடாக எரிபொருளைப் பெற்றுக் கொள்வது குறித்து இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

எரிபொருள் விநியோகம் மாத்திரமன்றி, இலங்கையின் எரிசக்தி உட்கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்கும் ரஷ்யா தனது ஒத்துழைப்பை வழங்க முன்வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## நடராஜா ரவிராஜ்...

மேன்முறையீட்டை விசாரித்த பின்னர், நீதிபதிகள் சசி மகேந்திரன் மற்றும் அமல் ரணராஜா ஆகியோர் அடங்கிய மேல்முறையீட்டு நீதிமன்ற அமர்வு இந்தத் தீர்ப்பை வழங்கியது.

பாராளுமன்ற உறுப்பினர் நடராஜ ரவிராஜின் கொலை தொடர்பாக, கடற்படை வீரர்களான பிரசாத் சந்தன குமார, காமினி செனவிரத்ன, பிரதீப் சமிந்த, சிவகாந்தன் விவேகானந்தன் என்ற சரண் மற்றும் பேபியன் ராய்ஸ்டன் ஆகியோருக்கு எதிராக சட்டமா அதிபர் 2016 ஆம் ஆண்டில் கொழும்பு உயர் நீதிமன்றத்தில் ஒரு வழக்கைத் தாக்கல் செய்திருந்தார்.

பின்னர், பிரதிவாதிகளின் வேண்டுகோளின் பேரில், சிங்களம் பேசும் உறுப்பினர்களைக் கொண்ட ஒரு நடுவர் மன்றத்தின் முன்பாக இந்த வழக்கு விசாரிக்கப்பட்டது.

தற்போது காவலில் உள்ள சம்பத் மனம்பெரி, இந்த வழக்கில் பிரதான சாட்சியாகப் பெயரிடப்பட்டு, சாட்சியமளித்திருந்தார்.

நீண்ட விசாரணைக்குப் பிறகு, நடுவர் மன்றத்தின் ஒப்புதலுடன் தீர்ப்பை அறிவித்த கொழும்பு உயர் நீதிமன்ற நீதியரசர், அனைத்து பிரதிவாதிகளையும் விடுவித்து விடுதலை செய்ய உத்தரவிட்டார்.

அந்தத் தீர்ப்புக்கு எதிராக சட்டமா அதிபர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்தார்.

உயர் நீதிமன்ற நீதிபதி, சம்பந்தப்பட்ட விசாரணையில் சமர்ப்பிக்கப்பட்ட சாட்சியங்களை நடுவர் மன்றத்திற்குத் தவறாகவோ அல்லது போதுமான அளவு விளக்கவில்லை என்று சட்டமா அதிபர் தனது மேன்முறையீட்டில் குறிப்பிட்டிருந்தார்.

அதன்பிறகு, இந்த மேன்முறையீட்டை விசாரித்த மேல்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி சசி மகேந்திரன், நீதிபதி அமல் ரணராஜாவின் ஒப்புதலுடன் இந்தத் தீர்ப்பை வழங்கினார்.

தீர்ப்பை வழங்குகையில், கொழும்பு உயர் நீதிமன்றம் இந்த வழக்கில் நள்ளிரவுக்குப் பிறகு 12.50 மணிக்குத் தனது தீர்ப்பை வழங்கியதாக நீதிபதி குறிப்பிட்டார்.

இது ஒரு அசாதாரணமான சூழ்நிலை என்றும் நீதிபதி கூறினார்.

இந்த வழக்கில், சம்பத் மனம்பெரி என்ற நபர் சாட்சியம் அளித்தார், மேலும் அவரது சாட்சியத்தின் மூலம் பிரதிவாதிகளுக்கு எதிராகப் போதுமான சான்றுகள் முன்வைக்கப்பட்டுள்ளன என்பது தெளிவாகிறது. அந்தச் சான்றுகள் குறித்து நடுவர் மன்றத்திற்குப் போதுமான அளவு தெரிவிக்க உயர் நீதிமன்ற நீதியரசர் நடவடிக்கை எடுக்கவில்லை என்று அரசு வழக்கறிஞர் முன்வைத்த வாதத்தை ஏற்றுக்கொள்வதாக நீதிபதி கூறினார்.

மேலும், இந்த விசாரணையில் முன்வைக்கப்பட்ட சான்றுகளுக்குச் சாட்சிய மதிப்பு இருந்தபோதிலும், இது தொடர்பாக நடுவர் மன்றத்திற்கு உயர்நீதிமன்ற நீதியரசர் முறையாக அறிவுறுத்தத் தவறிவிட்டார் என்றும் அந்தத் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

அதன்படி, சம்பந்தப்பட்ட பிரதிவாதிகளை விடுவித்த கொழும்பு உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை ரத்து செய்வதாக மேல்முறையீட்டு நீதிமன்ற அமர்வு கூறியதுடன், சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டுகள் மீது புதிய விசாரணையைத் தொடங்குமாறு கொழும்பு உயர் நீதிமன்ற நீதியரசருக்கு உத்தரவிட்டது. (அ)

## நாட்டின் ஏற்றுமதி...

பொருள்கள் மற்றும் சேவைகள் ஆகிய இரு துறைகளையும் உள்ளடக்கிய இலங்கையின் மொத்த ஏற்றுமதி வருமானம் 1.4 பில்லியன் அமெரிக்க டொலர்களை எட்டியுள்ளது.

இது 2025 பெப்ரவரி மாதத்துடன் ஒப்பிடும்போது 4.22 வீத வருடாந்த வளர்ச்சியாகும்.2026 ஜனவரி முதல் பெப்ரவரி வரையிலான காலப்பகுதியில் மொத்த ஏற்றுமதி வருமானம் 2.89 பில்லியன் அமெரிக்க டொலர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், இது 7.56 வீத வளர்ச்சியைக் காட்டுகின்றது.

## ஈரானிய தூதுவரை...

தூதர் பேஸ்புக் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

இந்த சந்திப்பின்போது, ஈரான் இஸ்லாமியப் புரட்சியின் வீரமரணம் அடைந்த உன்னத தலைவருக்கு சிறிசேன இரங்கலை தெரிவித்தார்.

மேலும், ஈரான் மக்களுக்குத் தனது ஆதரவை சிறிசேன மீண்டும் உறுதிப்படுத்தியதாகவும் குறிப்பிட்டுள்ளது.

மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் நிலவும் போர்ச் சூழல் குறித்தும், ஈரான் மற்றும் இலங்கைக்கு இடையிலான நட்புறவை மேலும் வலுப்படுத்துவது குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ)

## சிங்கள அரசுக்கு...

[illegible] தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பிரதிநிதிகள் விளக்கமாக எடுத்துக் கூறியுள்ளனர்.

ஜனநாயக தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளை, ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிடப் பிரதிநிதி மார்க் அன்ரூ பிறெஞ் நேற்று யாழ்ப்பாணத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பின் போது சமகால அரசியல் விவகாரங்கள், இந்திய அரசாங்கத்தின் உதவித் திட்டங்கள், படையினர், தொல்லியல் திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம் உட்பட அரசாங்கத்தின் பல்வேறு கட்டமைப்புகளின் ஊடாகத் தமிழர் தாயகப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் நில ஆக்கிரமிப்பு - அபகரிப்பு உட்பட தமிழர் நலன் சார்ந்த பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

அரசாங்கத்தின் பல்வேறு கட்டமைப்புகளின் ஊடாகத் திட்டமிடப்பட்ட முறையில் தமிழர் நிலங்கள் அபகரிக்கப்படுவதையும், கையகப்படுத்தப்பட்டுள்ள நிலங்களை விடுவிப்பது தொடர்பில் அரசாங்கத்தின் மெத்தனப் போக்கைச் சுட்டிக்காட்டிய ஜனநாயக தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர், தமிழர்கள் மீது வலிந்து திணிக்கப்பட்டுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்காமல், பாராளுமன்றத்தில் தனக்குள்ள பெரும்பான்மை பலத்தை வைத்து இப்போதுள்ள அரசாங்கமும் மாதாந்தம் பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் புதுப்பித்து, ஏற்றுக் கொள்ளும் வேலையையே செய்கிறது என்று குறிப்பிட்டனர்.

மேலும், ஐக்கிய நாடுகள் சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டு, உறுதியளிக்கப்பட்ட தீர்மானங்களைக் கூட அரசாங்கம் நிறைவேற்றுவதற்குத் தயாரில்லை. தமிழர் தாயகப் பகுதியில், தொல்லியல் திணைக்களம், வன இலாகா, வன ஜீவராசிகள் திணைக்களம் என வெவ்வேறு அடையாளங்களில் அரசாங்கமே திட்டமிட்ட முறையில் நில அபகரிப்பில் ஈடுபடுவதுடன், கையகப்படுத்தப்பட்ட நிலங்கள் விடுவிக்கப்படவுமில்லை என்று குறிப்பிட்டனர்.

இச் சந்திப்பில் தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகமும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் , புளொட் அமைப்பின் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன், சமத்துவக் கட்சியின் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சந்திரகுமார், ஜனநாயக போராளிகளின் கட்சியின் தலைவர் வேந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஒ)

## போதிய எரிபொருள்...

கப்பலொன்று நேற்று முன் தினம் நாட்டை வந்தடைந்துள்ளதுடன், அதிலுள்ள எரிபொருளைத் தரையிறக்கும் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை இம்மாதத்திற்குள் மேலும் இரண்டு எரிபொருள் கப்பல்கள் இலங்கைக்கு வரவுள்ளன.

அதன்படி,முதலாவது கப்பலில் 30,000 மெற்றிக் தொன் 92 ரக பெற்றோல் மற்றும் 5,000 மெற்றிக் தொன் 95 ரக பெற்றோலும் இரண்டாவது கப்பலில் 32,000 மெற்றிக் தொன் டீசல் மற்றும் 8,000 மெற்றிக் தொன் விமான எரிபொருளும் கொண்டுவரப்படவுள்ளது.

இதன்படி, எதிர்வரும் மே மாதம் வரை நாட்டுக்குப் போதுமான அளவு எரிபொருள் கையிருப்பில் உள்ளதாக அவர் இதன்போது உறுதிப்படுத்தியுள்ளார்.

இதேவேளை தற்போது நாட்டில் நடைமுறையிலுள்ள எரிபொருள் கியூ.ஆர். குறியீடு முறைமையின் கீழ் 6 மில்லியனுக்கும் அதிகமான பாவனையாளர்கள் பதிவு செய்துள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. (அ)

## வட்டுக்கோட்டை...

நேற்று காரைநகர் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரியவருகையில்-

அந்த வைத்தியசாலையை தரம் உயர்த்தும் போது அங்கே பணி நியமனத் திருத்தங்கள் செய்யப்பட வேண்டும்.

அதாவது எத்தனை வைத்தியர்கள் இருக்க வேண்டும், எத்தனை தாதியர்கள் இருக்க வேண்டும், எத்தனை ஊழியர்கள் இருக்க வேண்டும் என்ற கட்டமைப்பு வந்தால் தான் நாங்கள் சுகாதார உத்தியோகத்தரை கேட்கலாம்.

நாங்கள் அது குறித்து நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கின்றோம். அந்த வைத்தியசாலை 24 மணித்தியாலமும் இயங்க வேண்டும் என்றால் ஆகக் குறைந்தது எட்டு தாதியர்கள் அங்கே பணியாற்ற வேண்டும். ஆக அதற்குரிய ஒழுங்குகளை செய்ய வேண்டும்.

நாடளாவிய ரீதியில் எல்லா வைத்தியசாலைகளிலும் தாதியர் பற்றாக்குறை காணப்படுகிறது. ஆகவே அதனை நிவர்த்தி செய்த பின்னர் இந்த வைத்தியசாலையை இயங்க வைப்போம் - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# மேன்முறையீட்டுக்கான பதில் வரும்வரை இடமாற்றத்தை நடைமுறைப்படுத்தாதீர்!

## யாழ்ப்பாணத்தில் ஆசிரியர்கள் போராட்டம்



யாழ்ப்பாணம், மார்ச் 27

மேன்முறையீட்டு பதில் வரும் வரையில் தம்மை பழைய நிலையங்களில் பணியாற்ற அனுமதிக்க வேண்டும் எனக் கோரி வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக் குழு அலுவலகம் முன்பாக நேற்று வியாழக்கிழமை ஆசிரியர்கள் சிலர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இடமாற்றச் சபையால் இடமாற்றப் பட்டியலிடப்பட்ட சில ஆசிரியர்கள் தமக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக மேன் முறையீடு செய்துள்ளனர்.

இதனால் இடமாற்றம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், வருடா வருடம் இடமாற்றச் சபையால் ஆசிரியர்களுக்கான இடமாற்றங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் கடந்த 01.01.2026ஆம் திகதியன்று வழங்கவென பட்டியலிடப்பட்ட இடமாற்றங்கள் இதுவரை அமுல்படுத்தப்படாமல் தடுக்கப்பட்டு வருகின்றன. இதனால் வெளி மாவட்டங்களில் 08 வருடங்களுக்கு மேலாக கடமையாற்றி வரும் தாம் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டு வருவதாகவும், இடமாற்றப் பட்டியலின் அடிப்படையில் தமக்கான இடமாற்றத்தை விரைந்து செயற்படுத்துமாறும் கோரி கடந்த 24ஆம் திகதி வடமாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாக ஆசிரியர்கள் போராட்டம் நடத்தினர்.

அதனை அடுத்து நேற்று வியாழக்கிழமை இடமாற்ற பட்டியலில் தமக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக மேன் முறையீடு செய்துள்ள ஆசிரியர்கள், அதற்கான பதில் வரும் வரையில் இடமாற்றத்தை நடைமுறைப்படுத்தக்கூடாது என போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனைத் தொடர்ந்து ஆசிரியர் சங்கத்தைச் சேர்ந்த சிலர் வடக்கு மாகாண பொதுச்சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் ஆழ்வார்பிள்ளை சிறீயை சந்தித்தனர்.

இதன்போது தமக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் ஊடாக எந்தவொரு மேன்முறையீடும் அனுப்பப்படவில்லை என்றும் மேன்முறையீடு அனுப்பப்பட்டால் மட்டுமே தம்மால் பரிசீலனை செய்ய முடியும் எனவும், தன்னால் இதற்கு வழங்க முடியாது எனவும் மாகாண பொதுச்சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் தெரிவித்தார் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உப செயலாளர் தீபன் திலீசன் குறிப்பிட்டார். (அ-05)

# போதைப்பொருள் வலையமைப்பை முழுமையாக முடக்க முன்னுரிமை!

## பிரதி அமைச்சர் சுனில் வட்டகல

கொழும்பு, மார்ச் 28

இலங்கைக்குள் போதைப்பொருட்களைக் கடத்தி வந்த 29 பிரதான விநியோகிஸ்தர்களை குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் கைது செய்துள்ளதாக பொதுப் பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் நடைபெற்ற "நாட்டை ஒன்றிணைப்போம்" தேசிய செயற்திட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், இந்த சர்வதேச கடத்தல் வலையமைப்பைக் கண்டறிய குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் இந்தோனேசியா, நேபாளம் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்குச் சென்று விசேட விசாரணைகளை முன்னெடுத்ததாகக் குறிப்பிட்டார்.

குறிப்பாக, இந்தோனேசியாவிலிருந்து நாடு கடத்தப்பட்ட பிரதான சந்தேகநபர்கள் தற்போது பல முக்கிய வாக்குமூலங்களை வழங்கி வருவதாகவும், இது கடத்தல் காரர்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடல் மார்க்கமாக, குறிப்பாக திருகோணமலை துறைமுகம் ஊடாக இளைஞர்களை இலக்கு வைத்து முன்னெடுக்கப்படும் இந்தப் போதைப்பொருள் வர்த்தகம், திட்டமிட்ட குற்றங்கள் மற்றும் சட்டவிரோத ஆயுதப் பரிமாற்றங்களுடன் தொடர்புடையது என்றும் பிரதி அமைச்சர் சுட்டிக் காட்டினார். (அ)

# இடமாற்றங்களில் அரசியல் தலையீடு

## மருத்துவர்கள் எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 27

அரசியல் உத்தரவுகளுக்காக சட்டவிதிகள் மீறப்படுவதாகவும், முறையான இடமாற்ற நடைமுறைகள் சீர்குலைக்கப்படுவதாகவும் குற்றம் சாட்டி மருத்துவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். அரச மருத்துவ அதிகாரிகள் சங்க ஊடகவியலாளர் சந் திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த உதவிச் செய லாளர், வைத்தியர் ஹன்சமால் வீரசூரிய இவ்வாறு தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இதற்கு முன்னர் இல்லாத வகையில் மருத்துவர்களின் இடமாற்றங்கள் தற்போது அரசியல்மயமாகியுள்ளன. இதனால் மருத்துவர்கள் கடுமையான அழுத்தங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

இடமாற்ற விவகாரங்களில் தனிப்பட்ட பழிவாங்கல்கள் இடம்பெறுவதுடன், சுகாதார அமைச்சின் சில அதிகாரிகளினதும் அரசியல் சக்திகளினதும் செயற்பாடுகளால் மருத்துவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

இறுதி இடமாற்றப் பட்டியலில் இருந்து 78 இடங்கள் சட்டவிரோதமான முறையில் நீக்கப்பட்டுள்ளன. இந்த 78 இடங்கள் மாற்றப்படுவதால், ஒட்டுமொத்த இடமாற்றப் பட்டியலுமே தலைகீழாக மாறியுள்ளது.

பட்டப்பகலில் 78 வெற்றிடங்கள் மறைக்கப்பட்டமை குறித்து சுகாதார அமைச்சுக்கு முறைப்பாடு செய்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

2026 ஆம் ஆண்டுக்கான இடமாற்றங்களிலும் அரசியல் தலையீடுகள் இருக்கக்கூடும் எனத் தெரியவருகிறது. இவ்வாறான சட்டவிரோதச் செயல்கள் தொடர்ந்தால், நாம் கடிதங்கள் மூலம் அறிவித்துக் கொண்டிருக்காமல் கடும் நடவடிக்கைகளை எடுப்போம்.

393 ஆக இருந்த கஷ்டப் பிரதேச சேவை நிலையங்களின் எண்ணிக்கை 260 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. இது எவ்வாறு நடந்தது என்பது யாருக்கும் தெரியாது. இது ஒரு பாரதூரமான பிரச்னையாகும். அமைச்சரவை தீர்மானங்கள் ஊடாக முறையான இடமாற்ற நடைமுறைகளைச் சீர்குலைப்பதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம் - என்றார். (அ)

# அரிசி விலை அதிகரிக்காது!

கொழும்பு, மார்ச் 27

எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் அரிசி விலையை அதிகரிப்பதற்கு எந்தவித காரணமும் இல்லை என விவசாய மற்றும் கால்நடைவள பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

நாட்டில் நுகர்வுக்குத் தேவையான அரிசி இருப்பு போதுமானளவு உள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த பிரதி அமைச்சர், சந்தையில் தற்போது அரிசி விநியோகம் சீராக உள்ளதாகக் குறிப்பிட்டார்.

"எங்களிடம் தாராளமான அளவில் நாடு அரிசி கையிருப்பில் உள்ளது. உண்மையில் சொல்லப்போனால், தேவைக்கு அதிகமான நாடு அரிசி எங்களிடம் உள்ளது. கீரிச் சம்பா அரிசி தொடர்பில் ஒரு சிறிய சிக்கல் நிலவினாலும், அதன் விநியோகத்தை மேலாண்மை செய்யத் தேவையான நடவடிக்கைகளை நாம் எடுத்துள்ளோம்" என அவர் தெரிவித்தார்.

தற்போதைய சந்தை விநியோகத்திற்காக கடந்த பருவத்தில் பெறப்பட்ட நெல் மற்றும் இந்த பருவத்தில் அறுவடை செய்யப்பட்ட நெல் ஆகிய இரண்டும் பயன்படுத்தப்பட்டு வருவதாக அவர் விவரித்தார்.

# மருத்துவர்களுக்கு விடுமுறை சனிக்கிழமைகளில் வேண்டும்

## மருத்துவ நிபுணர்கள் சங்கம் அரசிடம் அவசர கோரிக்கை

கொழும்பு, மார்ச் 27

நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடி மற்றும் அதீத விலை உயர்வு காரணமாக சுகாதாரத்துறையினர் கடும் பாதிப்புக்குள்ளாகியுள்ள நிலையில், சனிக்கிழமைகளை மருத்துவர்களுக்கான உத்தியோகபூர்வ விடுமுறை தினமாக அறிவிக்குமாறு மருத்துவ நிபுணர்கள் சங்கம் அரசாங்கத்திடம் அவசர கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக அந்தச் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் பின்வரும் முக்கிய விடயங்கள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

குறிப்பாக வெளிமாவட்ட மருத்துவமனைகளில் பணியாற்றும் மருத்துவ நிபுணர்கள், ஒரு நாளைக்கு பலமுறை நீண்ட தூரம் பயணிக்கவேண்டியுள்ளது. தற்போதைய எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் விலை உயர்வால் இவர்களது போக்குவரத்துச் செலவுகள் கட்டுப்படியாகாத நிலையை எட்டியுள்ளன.

தற்போதைய சூழலில் சுகாதார சேவைகளைத் தடையின்றி முன்னெடுப்பதற்கு, வாராந்த வேலை நாள்களை மீளமைத்து, சனிக்கிழமையை விடுமுறை தினமாக அறிவிப்பது அவசியமாகும்.

ஏனைய அரச துறை ஊழியர்களுக்கு எரிபொருள் விலை உயர்வுக்கு ஏற்ப கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றபோதிலும், மருத்துவ நிபுணர்களுக்கு போக்குவரத்துச் செலவுகளுக்காகப் போதுமான இழப்பீடுகள் வழங்கப்படுவதில்லை என மருத்துவ நிபுணர்கள் சங்கம் அதிருப்தி வெளியிட்டுள்ளது.

தூர பிரதேசங்கள் மற்றும் பின்தங்கிய பகுதிகளில் பணியாற்றும் மருத்துவர்கள் மத்தியில் இந்தச் சூழல் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. இதற்கு உடனடித் தீர்வு காணப்படாவிட்டால், விசேட மருத்துவ சேவைகள் பாதிக்கப்படக் கூடும் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. (அ)

# யாழ். பண்ணை பகுதியில் வாள்வெட்டு!

## இளைஞர் ஒருவர் படுகாயம்!!

யாழ்ப்பாணம், மார்ச் 27

யாழ்ப்பாணம் பண்ணையில் நேற்று மாலை நடத்தப்பட்ட வாள் வெட்டில் மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞரொருவர் படுகாயமடைந்துள்ளார்.

பண்ணை பகுதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞரை விரட்டி சென்ற இரண்டுக்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிள்களில் பயணித்த இனந்தெரியாத குழுவினரே குறித்த வன்முறையில் ஈடுபட்டுள்ளனர்.

படுகாயமடைந்த இளைஞர் பண்ணை கடல்பகுதியில் விழுந்த நிலையில் யாழ்ப்பாண மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரால் மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

தாக்குதல் நடத்தியவர்கள் தப்பிச்சென்ற நிலையில் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் மற்றும் தடயவியல் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# நெடுந்தீவுக் கடற்பரப்பில் 7 இந்திய மீனவர்கள் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 27

இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறி பிரவேசித்த குற்றச்சாட் டில் இந்திய கடற்றொழிலாளர்கள் 07 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவுக்கு வடக்கே, இவர் கள் கைது செய்யப்பட்டதாக கடற்படை ஊடகப் பேச்சாளர் கொமாண்டர் புத்திக சம்பத் தெரிவித்தார். இந்திய கடற்றொழிலா ளர்களின் 02 விசைப்படகுகளும் கைப் பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட இந்திய கடற்றொழிலாளர்கள் கரைக்கு அழைத்து வரப்பட்டு, கடற்றொழில் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டனர் என கடற்படை பேச்சாளர் குறிப்பிட்டார்.

இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த கடற்றொழிலாளர்களே கைது செய்யப்பட்டுள்ளதாக கடற் றொழில் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 27.03.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media